நூல் 23

# பெரியநாயகியம்மைகலித்துறை

துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 6 | னீகொள | னீகொள் |

உ

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

# பெரியநாயகியம்மைகலித்துறை.

இறைவற்குத் தக்க விறுமாப்
பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற
தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற நெற்கொண் டுலகேற்
றுனைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை
வாழும் பெரியம்மையே. 1

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ
திருத்திப் பயந்துகொடுஞ்
சித்தர்க் ககற்றுநின் பாதாம்
புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்கு மெண்ணி மதியுடையே
னென்பன் வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நாலினுஞ்
செம்மை பெரியம்மையே. 2

இழைபொறுத் தாற்பொறை தானென்ப
ரானல் லிசைப்புலவர்
மழைபொறுத் தார்புனன் முக்காற்
பொறுக்கும் வழக்கதுண்டே
யுழைபொறுத் தார்நல் லியற்பகை
யார்மனைக் குற்றவொரு
பிழைபொறுத் தாய்நன்று காண்குன்றை
வாழும் பெரியம்மையே. 3

கையன்று தாமரை கண்ணன்
றிளமென் கயலெனவே
பொய்யன்று கங்கையை நீரென்று
சாதிப்பர் போர்விடையார்
மெய்யென்று நீகொண் டிரேலற
லாயினென் மென்கையிடைப்
பெய்யென்று பின்னை யறிவாய்தென்
குன்றைப் பெரியம்மையே. 4

பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள்
சுற்றும் புதுமதியி
னன்வாங்கு கோடு கிழிக்கு
நகுவெண் டலைபடுங்கன்
முன்வாங்கு மெந்தைநின் பாதாம்
புயத்தின் முடிவணங்கிற்
பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை
வாழும் பெரியம்மையே. 5

கூடிநறு மென்றரு மீதிருப்
பாரெனக் கங்கையென்பாண்
முடிநடு வேறி யிருந்தனள்
வேணின் மூதிர்விலத
னடியடை வாரெனச் சங்கரன்
பாங்க ரமர்ந்தனைநீ
பிடிநடை யேகுயி லேகுன்றை
வாழும் பெரியம்மையே. 6

நின்போ லிலரரு ளாளரென்
றேசொல நின்கொழுந
னென்போ னொருவன் மகன்பூங்
கழுத்தினை யீர்வலென்றே
யன்போர் சிறிது மிலனைகப்
போக வதற்கிசைந்து
பின்போய் விடாதுகண் டாய்குன்றை
வாழும் பெரியம்மையே. 7

செச்சை மலர்புரை வானோடு
மேணி திறந்துகொண்டு
கச்சை யரவொன் றசைத்துக்
கபாலங் கரத்தெடுத்துப்
பச்சை மயிலனை யார்மனை
தோறும் படர்ந்திரக்கும்
பிச்சை யொழிகென் றொருவார்த்தை
சொல்லெம் பெரியம்மையே. 8

சோதிப் பதியன்றி வேறொரு
தெய்வந் தொழுதற்கில்லை
யோதிற் பிறரென வச்ச
முறும வுயிர்களெல்லா
நீதிப் புதல்வர்க ளாயின
வாதலி னீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை
வாழும் பெரியம்மையே. 9

நின்னேய நாயக னென்றிருப்
பாய்நினை நீத்தகன்று
தன்னேரில் பூவணத் தேயன்று
போய்ச்செய்த தன்மையெலாஞ்
சொன்னே னலேனினி நின்னோ
டொளிப்பதென் சொல்லுவன்யான்
பின்னே தெனக்குத் தருவாய்தென்
குன்றைப் பெரியம்மையே. 10

நற்றவத் துன்னைப் பெறுமலைக்
கென்னமுன் னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெலும்பே
யணியும் பழமலைதான்
சற்றெனக் கையந் தராதுசொன்
னும்மலைச் சாதியுள்ளே
பெற்றவர்க் கென்ன முலைவிலை
குன்றைப் பெரியம்மையே. 11

கற்ரு ரறிகுவர் மக்கடம்
பேறெனக் கட்டுரைத்த
சொற்ரு ஞெருபெண் ஞெழித்ததென்
பாரோடு தோல்லுலகி
னற்ருண் மகற்பெறு கென்ருசி
சொல்பவர் நாணவுனைப்
பெற்ருன் மலையரை யன்குன்றை
வாழும் பெரியம்மையே. 12

கரிய மிடறுடைப் பெம்மான்
கரத்துழைக் கன்ருெடுமோ
ரரிய முடியம் புலியோடு
மேவினை யாடுகின்ருய்
தெரிய வரிய பதினு
லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது
குன்றைப் பெரியம்மையே. 13

தண்ணு ரிதழி புனைவான்
விழியிணை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் ருேநின்
திருமுக பங்கயத்திற்
கண்ணு யினருனக் கவ்வலை
மாதுங் கலைமகளும்
பெண்ணு ரமுதனை யாய்குன்றை
வாழும் பெரியம்மையே. 14

உள்ளத் துறுபிணி யேற்கு
மருந்துக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப்
பான்மெல் விரனுதியாற்
றெள்ளித் துளியள வாயினுந்
தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத்
தாலென் பெரியம்மையே. 15

ஆறாத் துயர்கொண் டடியேன்
சலிப்ப வதுசெவியி
லேறும லேயிருந் தாலென்செய்
வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்ட முதலா
யிளமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ ளேகுன்றை
வாழும் பெரியம்மையே. 16

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன்
றருமிரு நாழிநெல்லால்
வினைமாட்சி கொண்டுயி ரெல்லா
மளித்தருண் மேன்மையினுன்
மனைமாட்சி யெய்து முனக்கே
பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்குண் டுலகீன்ற
குன்றைப் பெரியம்மையே. 17

நெடிய விலங்க லொருசிலை
யாக்கிய நின்பதிமேற்
கொடிய வநங்கன் சிலைபோ
யெடுத்துமுன் கொண்டெதிர்ந்த
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும்
போசொல் லுனதுநடுப்
பிடியு ளடங்கிய தென்னிது
குன்றைப் பெரியம்மையே. 18

பண்டகு வீணை யொடுபாட
வந்தவப் பாமடந்தை
கண்டழு மாறு மதிநிரை
போலக் கவின்கனியும்
வெண்டலை மாலை கிடந்தொளிர்
தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி நீகுன்றை
வாழும் பெரியம்மையே. 19

பெரியநாயகியம்மைகலித்துறை முற்றிற்று.

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

உ

அம்பிகைதுணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க

# பெரியநாயகியம்மைகலித்துறையின்

## குறிப்புரை

---

**செய்யுள்** (1) இறுமாப்பனென அரன் உனைப்பெறவுற்றனை என்க.

(2) இருத்தி அகற்றுமென இயையும். அகலும் என்றும் பாடம். செஞ்சிலை- ஈண்டு அம்மி. மதி- அறிவு, சந்திரன்.

(3) புனலும் மூக்காற்பொறுக்கும் வழக்குண்மையின் இழை பொறுத்தலாதியனவும் புலவரால் பொறையென விதக்கப் படினும் அவை பொறையன்று; இப்பிழைபொறுத்தே நற் பொறையென்பது. மழை - குளிர்ச்சி.

(4)பொய்யன்றென்பதற்குப் பொய்யல்லையாம்படியென்க.

(5) வணங்கில் சுற்றும் கிழிக்கும் படும் ஆகலின் பின் வாங்கிநில் என்றபடி. கல் - மேரு.

(6) முதிர்வேனிலில் என்பது தாப்பிசையாய்நின்றது.

(7) உடன்செல்லாமையால் நின்போல அருளாளர் இல ரென்றுகூறச் செய்தனை என்பது.

(8) செச்சைமலர் புரைவானேடு சொல் என்க.

(10) கதை யான்கூறுவேன் அதற்குக்காரணம் எனக்கு விளக்குக என்பது. எதுவென்பதற்கு எப்பொருளெனலும் ஒன்று.

(11) மூலேவிலே - பரிசத்தொகை.

(12) பெண்ணொழித்ததென்பது - மக்களென்னும் பொது மொழி ஆண்பாலேயே உணர்த்திற்றென்பது. என்பாரொடு சொல் பவர்நாணவென இயையும். தாள் - முயற்சி.

(13) ஏதுவென்பது காரணப்பெயரெனவும் எவ்வாறெய் திற்றெனவும் பொருள்படும். இச்செய்யுள் சிலேஷை.

(14) விழியினே - சூரியசந்திர நேத்திரங்கள்

(15) கிள்ளேயென்பது பிள்ளேயென்பதற்கியைய இணேந்து வருமொழியாய்க் கிளியையுமுணர்த்திற்று.

(17) கணவரளித்ததுகொண்டு அறம்வளர்ப்பார்க்கே கற்பு மாட்சியுரித்தென்பது நூற்றுணிபாகலின் மனேமாட்சியெய்து முனக்கே பெருங்கற்புமாட்சியெனவும், அஃதியற்றூர்க்கு எங்ஙன மெய்துமென்பார் பினேமாட்சி யார்க்குண்டெனவுங் கூறினர்.

(18) முன் பதிமேலெதிர்ந்தவெனவும், உனதூநடு செங் கரும்போ இது பிடியுளடங்கியதென் சொல் எனவுங் கூட்டுக. சிலே போதல் - சிலேயிற்றேர்தல். நடு - இடை

(19) தோளி - வினேக்குறிப்புப்பெயர். அழுமாறு நங் கணவர்தலேயும் இவ்வாறுங்கொலென்னும் எக்கத்தாலென்க.

பெரியநாயகியம்மைகலித்துறையின் குறிப்புரை

முற்றிற்று.

---

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

---